Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி


நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆடி 25 | (09 - 08 - 1992) | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 173

## தமிழ் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்

அராலிச் சந்தியில் நேற்று விடுதலைப்புலிகளின் கண்ணி வெடித் தாக்குதலினால் சிறிலங்கா இராணுவததின் முக்கியஅதிகாரிகள் கொல்லப்பட்டசெய்தி அறிந்த மிழ் மக்கள் ஆரவாரப்செய்து மகிழ்ச்சி கொண்டாடினர். நேற்று மாலை வானொலிமூலம் இத்தகவல் வெளியானதையடுத்து ஆங்காங்கே தமது அன்றாடக் கடமையில் ஈடு பட்டிருந்த மக்கள் தம்மையே மறந்த நிலையில் துள்ளிக்குதித்தனர். தமது நண்பர் கள், உறவினர்களுடன் மேற்படி செய்தியை கூறி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்ட னர் யாழ் இந்துக் கல்லூரியில் ''கூவு குயிலே'' இசை நாடா வெயீட்டு விழா நடை பெற்றுக் கொண்டிருந்த சமயம் நிகழ்ச்சி இடைநிறுத்தப்பட்டு இச்செய்தி அறிவிக் கப்பட்டதும் மண்டபம் நிறைந்திருந்த மக்கள் கூட்டம் மகிழ்ச்சிக் கடலில்மிதந்தது. நல்லூர் கந்தசுவாமி ஆலயததிற்கு மாலைத் திருவிழாவிற்கு கூடிய பக்தர்கள் மேற் படி செய்தி குறித்து கூட்டம் கூட்டமாகநின்று பேசிக்கொண்டிருந்தனர் அதேபோல குடாநாட்டின் சேந்திரசந்திகள் சனசமூக நிலையங்கள் போன்ற பல்வேறு மக்கள் கூடும் இடங்களிலெல்லாம் இச்செய்தியால் மகிழ்ச்சிஅலைமோதியது. (க)

### ( மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ உட்பட )

# வடபிராந்தியத் தளபதிகள் அனைவரும்
# புலிகளின் கண்ணிவெடியில் சிதறிச்சாவு



மேஜர் ஜெனரல்
டென்சில்
கொப்பேகடுவ

வடபகுதி இராணுவ நடவ டிக்கைகளுக்குப் பொறுப்பான இராணுவ தளபதி மேஜர்

## ஊர்காவற்றுறையில் படைக்கு பேரிழப்பு:
## புலிகளின் விசேட வேவுப் பிரிவினர் சாதனை

(கொழும்பு)

வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, யாழ். மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரெட்னா, வட பிராந்திய கடற்படைத் தளபதி கொமடோர் மொகான் ஜெயமான உட்பட வடமாகாண உயர் இராணுவ அதிகாரிகள் பத்துப் பேர் நேற்று காலை இடம் பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் பலியாகினர். இச்சம்பவம் ஊர்காவற்றுறை - அராலிச் சந்திக்கு அண்மையில் தளபதிகள் சென்ற இராணுவ வாகனத்தொடர் அணி விடுதலைப் புலிகளின் விசேட வேவுப் பிரிவினர் வைத்த கண்ணிவெடியில் சிக்கிய போதே இடம்பெற்றது.

நேற்று முன் தினம் இரவு ஹெலிகொப்டர் மூலம் காரை நகர் கடற்படை தளத்திற்கு சென்ற இராணுவத் தளபதி டென்சில் ஹொப்பேகடுவ சக அதிகாரிகளுடன் நேறறுகாலை 9 மணியளவில் ஹெலிக்கொப் டர் மூலம்ஊர்காவற்துறைக்கு சென்றிருந்தார்.

அங்கிருந்து மூன்று ஜீப் வண்டிகளில் அராலித் துறையை பார்வையிட சென் றிருந்தார். அவ் இடங்களை பார்வையிட்டபின் பத்து உய ரதிகாரிகளும் ஜீப் வண்டி களில் ஊர்காவற்துறைக்கு திரும்பி சென்று கொண்டிருக் கும் போதே இவை கண்ணி வெடியில் சிக்கி சிதறின.

அவற்றிலிருந்த ஒன்பதுஅதி காரிகள் அந்த இடததிலேயே கொல்லப்பட்டனர். இராணு வத் தளபதி டென்சில் ஹொப்பேகடுவ படுகாயம்

வேவுப் பிரிவினர் வைத்த கண்ணிவெடியில் சிக்கி கேணல் புஞ்சிஹேவா, கடற்படை யைச் சேர்ந்த லெப். அஞ்சனா திசநாயக்கா உட்பட நான்கு ஆயுதப் படையினர் கொல்லப் பட்டமையும் குறிப்பிடத்தக் கது.

### புலிகளின் கண்ணிக்கு பலியானோர் விபரம்

(கொழும்பு)

ஊர்காவற்றுறை - அராலிச்சந்தியில் நேற்று இடம் பெற்ற கண்ணிவெடிச் சம்பவததில் புலியாகிய சிறி லங்கா படை உயரதிகாரிகளின் விபரம் வருமாறு:-


★ வடபிராந்தியத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் ஹொப்பேகடுவ

### ஆஸ்பத்திரியை சூழ மக்கள் கூட்டம்

(கொழும்பு)

அராலிச் சந்தியில் கண்ணி வெடியில் காயமடைந்த டென் சில் கொப்பேகடுவவை ஆஸ் பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட செய்தியறிந்த மக்கள் கூட்டம் ஆஸ்பத்திரியைச் சூழ்ந்து கொண்டது.

மட்டுமே பார்வையிட அனு மதிக்கப்பட்டனர். ஆஸ்பத்தி ரியைச்சூழ பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. ஆஸ்பத்திரிக்கு வெளியில் நின்ற மக்கள் கூட் டத்திற்கு கொப்பேகடுவ



பிரிகேடியர்
விஜய விமலரெட்னா

பிரிகேடியர் விஜயவிமல ரெட்னா [வயது 51] 1969 ஆம் ஆண்டு இராணுவ

வடபகுதி இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ (54) மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

1960 இல் இராணுவத்தில் இணைந்த இவர் வடக்கு-கிழக்கு பிராந்தியங்களில் மேற்கொள்ளப்பட்ட பலஇராணுவ நடவடிக்கைகளில் பங்கு பற்றினார். ஆரம்பத்தில் கிளிநொச்சிப் பகுதியிலும் பின்னர் வவுனியா, யாழ்ப்பாணப் பகுதிகளிலும் கடமையாற்றிய கொப்பேகடுவ இராணுவத்தில் படிப்படியாக உயர்ந்து வடபகுதி இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான தளபதியானார்.

1987ஆம் ஆண்டு வடமராட்சி ''ஒப்பரேசன் லிபரேசன்'' இராணுவ நடவடிக்கையில் ஒரு பிரிவிற்குத் தலைமை தாங்கினார்.

பின்னர் இரண்டாவதுஈழப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

- ★ வடபிராந்தியத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் ஹொப்பேகடுவ
- ★ யாழ். பிராந்தியத் தளபதி பிரிகேடியர் விஜய விமல ரெட்னா
- ★ கடற்படை பிராந்தியத் தளபதி கொமடோர் சி.ஏ. மொகான் ஜெயமான
- ★ லெப்டினன்ட் கேணல் ஜி எச். ஆரிய ரெட்ணா
- ★ லெப்டினன்ட் கேணல் ஏ. பலிப்பான
- ★ லெப்டினன்ட் கேணல் எஸ். ஆர் ஸ்ரீபன்
- ★ மேஜர் என். எஸ். டி அல்விஸ்
- ★ கடற்படை லெப்டினன்ட் லங்காதிலக
- ★ கடற்படை லெப்டினன்ட் டபிள்யூ டி சி.டபிள்யூ விஜயபுர
- ★ டபிள்யூ. ஏ. விக்கிரம ரெட்னா

கொல்லப்பட்டனர். இராணுவத் தளபதி டென்சில் ஹொப்பேகடுவ படுகாயம் அடைந்த நிலையில் ஹெலிக்கொபடர் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

இதேவேளை, கடந்த ஜூன் மாதத்தில் பூநகரியில் விடுதலைப் புலிகளின் விசேட

செய்தியறிந்த மக்கள் கூட்டம் ஆஸ்பத்திரியைச் சூழ்ந்து கொண்டது.

எனினும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட கொப்பேகடுவவை பொதுமக்கள் எவரும் பார்வையிட அனுமதிக்கப்படவில்லை. அவரது மனைவியும், பிள்ளைகளும் முப்படைத் தளபதிகளும்

வெளியில் நின்ற மக்கள் கூட்டத்திற்கு கொப்பேகடுவ மரணமடைந்த செய்தி மட்டும் நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கறுவாத்தோட்டத்தில் உள்ள அவரது றோஸ் மீட் பிளேஸ் இல்லத்திற்கு அவரது உடல் எடுத்துச்செல்லப்ப—

[4 ஆம் பக்கம் பார்க்க]

ரெட்னா [வயது ο1] 1969 ஆம் ஆண்டு இராணுவ சேவையில் சேர்ந்தவராவார். 1987 இல் வடமராச்சியில் நடந்த ஒப்பரேசன் லிபரேசனில் பங்கேற்றவர் இவர் வடக்கு-கிழக்கில் நீண்டகாலம் சேவையாற்றியவராவார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அரச வட்டாரங்களில் பேரதிர்ச்சி: குழம்பிய நிலையில் இராணுவம்

(கொழும்பு)

ஒரு வருடத்திற்கு முன்னர் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தீவகத்தில் நேற்று இடம் பெற்ற கண்ணிவெடித் தாக்குதல் குறித்து சிறிலங்கா அரசு வட்டாரங்களில் பேரதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இத் துணிகரத் தாக்குதலை விடுதலைப்புலிகள் எவ்வாறு நடத்தினர்? என்றும், தாக்குதலுக்குப் பயன்பட்ட கண்ணிவெடி ஒரு வருடத்துக்கு முன்னரே புலிகளால் புதைக்கப்பட்டதா? அல்லது அண்மையில் தீவகத்தினுள் ஊடுருவிய புலிகளால் புதைக்கப்பட்டதா? என்றும் பல்வேறு சந்தேகங்கள் மத்தியில் இப்பேரதிர்ச்சி ஏற்பட்டிருப்பதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந் நிலையில் தொடர்ந்து எடுக்கப்படவேண்டிய இராணுவ நடவடிக்கை குறித்து அரச வட்டாரங்களில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1980களில் புலிகளுக்கு எதிரான கடுமையான போர்களில் ஈடுபட்டு இராணுவத்தை வழி நடத்திய மேஜர் ஜெனரல் டென்சில் ஹொப்பேகடுவவின் இழப்பு இராணும் சந்திக்கும் மாபெரும் இழப்பு என வர்ணிக்கப்படுகிறது.

மேலும் மேஜர் ஜெனரல் ஹொப்பேகடுவ உட்பட தங்களது முக்கிய உயர் அதிகாரிகளை வடக்கில் இழந்திருப்பது இராணுவ வீரர்களின்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## விருது வழங்கி அரசு கௌரவிப்பு

நேற்றைய கண்ணிவெடிச்சம்பவத்தில் மரணமடைந்த மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவிற்கு ''ரணவிக்கிரம'' விருதும், பிரிகேடியர் விஜயவிமலரட்னவிற்கு ''ரணசூரய'' 'ரணவிக்கிரம' விருதுகளும் வழங்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

## அமைதியை பேணும்படி கூட்டுப்படை கோரிக்கை

[கொழும்பு]

வீண் வதந்திகளை நம்பி மக்கள் பதற்றமடைய வேண்டாம் என்றும் மக்கள் அனைவரையும் அமைதியாக இருக்கும்படியும் கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று மாலை விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

கொழும்பு நகரில் நேற்று தோன்றிய பதற்றநிலையைத் தொடர்ந்து கூட்டுப்படைத் தலைமையகம் இந்த அறிக்கையை வெளியிட்டது.

ஐக்கிய இலங்கையைப் பாதுகாப்பதற்காக மரணமடைந்த இராணுவ அதிகாரிகளின் உடல்களுக்கு மக்களை அஞ்சலி செலுத்தும்படியும், அமைதி நிலையை பேணும்படியும் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## வடமாகாணத் தளபதிக்கு பிரேமதாசா அஞ்சலி

(கொழும்பு)

கண்ணிவெடியில் கொல்லப்பட்ட டென்சில் கொப்பேகடுவவின் உடலுக்கு ஜனாதிபதி பிரேமதாசா, பிரதம மந்திரி விஜயதுங்க, பிரதிபாதுகாப்பு அமைச்சர் ஜோன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஹெலி தப்பியது

[கொழும்பு]

ஊர்காவற்துறை அராலிச் சந்தியில் நேற்று இடம் பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் ஹெலிக்கொப்டர் ஒன்று மயிரிழையில் தப்பியது

சிறிலங்கா படைஉயரதிகாரிகளை காரைநகரிலிருந்து ஏற்றிவந்த ஹெலி ஒன்று கண்ணிவெடி வெடித்த இடத்திலிருந்து 500 யார் தூரத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

எனினும் கண்ணிவெடியால் ஹெலிக்கொப்டருக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## யாழ். ராணுவ நடவடிக்கை; ஆராயவே சென்றனர்

(கொழும்பு)

ஊர்காவற்துறையில் உயர் மட்டக் கூட்டம் ஒன்றை நடத்தியபின் திரும்பிச் செல்லும் வழியிலேயே கடற்படை மற்றும் உயர் இராணுவ அதிகாரிகள் கண்ணிவெடியில் சிக்கி ஒட்டுமொத்தமாகக் கொல்லப்பட்டனர்.

வடபகுதியில் அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கையை எப்படி நடத்துவது என்பது குறித்துத் திட்டமிடவே

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பதவி உயர்வு பெறவிருந்த அதிகாரிகளே பலியாகினர்

நேற்றைய கண்ணிவெடியில் கொல்லப்பட்ட அதிகாரிகள் பலர் இவ் வருட இறுதிக்குள் பதவி உயர்வு பெறவேண்டியவர்கள் என்றும் ஒரு அதிகாரி இவ் வருட முடிவில் ஓய்வு பெற இருந்தவர் என்றும் தெரிய வருகிறது.

இவ் அதிகாரிகள் இராணுவ

(4 ஆம் பக்கம் பார்கக)

## வெளிநாட்டில் பயிற்சி பெற்ற கடற்படைத் தளபதி

(கொழும்பு)

வட-கிழக்கு மாகாணங்களில் கடற்படை நடவடிக்கைகளைத் திட்டமிடும் கடற்படைப்பிராந்திய தளபதியான கொமடோர் சி ஏ. ஜெயமான சிறிலங்கா கடற்படை அதிகாரிகளில் ஓர் உயர் அதிகாரி என்பது குறிப்பிடத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு நகரில் பதற்ற நிலை பாதுகாப்பிற்கு படைகள் அழைப்பு

(கொழும்பு)

கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பு நகரில் பதற்றநிலை தோன்றியுள்ளது. பதற்றத்தைத் தணிக்கவும், கொழும்பு நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் விமானப்படையினர் பாதுகாப்புக் கடமைக்காக அழைக்கப்பட்டிருக்கின்றனர். நகரின் பாதுகாப்புக் கடமையில் ஏற்கனவே இருந்த இராணுவத்தினர் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றனர்.

அதேவேளை நேற்று மாலை கொழும்புநகரின் பல்வேறு இடங்களிலும் மக்கள் கூட்டங்கூட்டமாக நின்று இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்ட செய்தி குறித்து பேசிக்கொண்டிருந்தனர்.

மேலும் தேசிய மட்டத்தில் நாட்டிற்கு பேரிழப்பு ஏற்பட்டிருக்கும் இந் நேரத்தில் நாட்டுமக்கள் அமைதியாக இருக்க வேண்டும் என சிறி

(4ஆம் பக்கம் பார்க்க)

# மாதத்திற்கு ஒரு முறை மட்டுமே நிவாரணம்! கோமாரி தமிழ் மக்களுக்கு அரசு ஓரவஞ்சகம்!!

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொத்துவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து 1990 ஆம் ஆண்டு வன்செயல்களினால் அகதிகளான குடும்பங்களில் 604 குடும்பங்கள் கோமாரியில் கடந்த 25 மாதங்களாக வசித்து வருகிறார்கள்.

இவர்களுக்கென இதுவரை ஒரு மலசலகூடம், ஒரு கிணறு கூட அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

கோமாரிக் கிராமத்தில் இரு இடங்களில்உள்ள அகதி முகாம்களில் 205 குடும்பங்கள் வசிக்கின்றன. இவர்களுக்கு வாரா வாரம் இலவச உலர் உணவுப் பொருள்கள் பாணமை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் வழங்கப்படுகிறது.

இந்த உலர் உணவுப்பொருள்கள் ஒவ்வொரு வாரமும் ஒரு குறிப்பிட்ட தினத்தில் வழங்கப்படுவதில்லை ஒரு வாரத்திற்கான பொருள்கள் அடுத்த வாரத்திலும் கிடைக்கும் அல்லது மாத முடிவிலும் கிடைக்கும். அதுவும் கிடைப்பது அரிசியும், சீனியும் மட்டுமே.

தங்களுக்கு 17 ரூபாவுக்கு வழங்கப்பட்ட ஒரு கிலோ அரிசியை கோமாரி மக்களுக்குப் 10 ரூபா வீதமும், 28ரூபாவுக்கு வழங்கப்பட்ட சீனியை 20 ரூபாவுக்கும் விற்பனை செய்து அந்தப் பணத்திலேயே தங்களுக்குத் தேவையான ஏனைய காய்கறிகள் பொருள்களை வாங்கி வாழ்க்கை நடத்த வேண்டிய நிலையில் பலர் உள்ளனர்.

இங்குள்ள 694 குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொருள்கள் கிடைக்கிறது. ஆனால் புனர்வாழ்வுத் திணைக்களத்தினால் மாதம் ஒரு முறை அல்லது ஒரு தடவை போசாக்கு உணவுப் பொருள்களாக வழங்கப்படும் பால்மா, பருப்பு வகைகள் 250 குடும்பங்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகின்றன.

இரு மாதங்களுக்கு முகாமுக்கு வெளியே உள்ள 399 குடும்பங்களுக்கும் இந்தப் பொருள்கள் வழங்கப்படுவதாக இல்லை. இது தொடர்பாக பொத்துவில் பகுதி புனர்வாழ்வுக் கழகத்தினர் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், புனர்வாழ்வு அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரின் கவனத்திற்

திருக்கோயில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் வழங்கக் கூடியதாக இருந்தால் அகதிகளுக்கு வசதியாக இருக்குமென்று அகதிகள் தெரிவிக்கின்றார்கள்.

தற்போது திருக்கோயில் பகுதியில் அகதிகளாக இருந்த 300 குடும்பங்கள் இதுவரை தங்களின் சொந்த இடமான வீரமுனைக்குச் சென்றுள்ளார்கள். அந்த இடங்களில் தற்போது கோமாரியில் இரு அகதி முகாம்களில் உள்ள 205 குடும்பங்களும் இடம்பெயர இருப்பதாக தெரிய வருகிறது.

இவர்களுக்கு உள்ள முக்கியமான பிரச்சினைகள் அடிப்படை வசதிகள் இல்லாமை வைத்திய வசதிகள் இல்லாமையாகும். தற்போது உள்ள நிலைமையில் பொத்துவில் பகுதியில் மீளச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால் 205கோமாரி அகதிகள் திருக்கோயில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் அகதிகளாக இடம் பெயரவுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 25 அகதி முகாம்களில் கோமாரியில் உள்ள அகதி முகாம் ஒரு கவனிப்பார் அற்ற பிரதேசமாக இருக்கிறது அப்பகுதிக்கு அதிகாரிகள் செல்வது இல்லை அரசியல்வாதிகள் தப்பித் தவறிச் சென்றாலும் அகதிகளுக்கான ஒரு உருப்படியான நடவடிக்கைகளை உயர்மட்டத்தில் எடுப்பதாகவும் இல்லை. கோமாரியில் உள்ள அகதிமுகாமிலே 55 இளம் விதவைகள் இருக்கிறார்கள். பாடசாலை செல்ல வேண்டிய பெருந்தொகையான சிறார்கள் பாடசாலைக்குச் செல்வதற்கு உடை, பாடசாலை உபகரணங்கள் போன்ற பொருள்கள் இல்லாததினால் செல்லாது இருக்கிறார்கள். சிலர் தங்கள் குழந்தைகளாவது எதிர்காலத்தில் சிறப்பாக இருக்கட்டும் என்று குழந்தைகளை பலருக்கு விற்கவும் முன்வந்திருப்பது மிகவும் கவலைக்குரியது.

அம்பாறை மாவட்டத்திலே கோமாரி ஒரு வரண்ட பிரதேசம் அங்கு நிரந்தரமாக வசிப்பவர்கள் கூட உணவுக்கு அந்தரப்படும் பிரதேசத்தில் 604 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் 25 மாதங்களாக இருப்பதால் அங்கு நிரந்தரமாக இருப்பவர்களுக்கு பெரும் உபத்திரவமாக இருந்து வருகிறார்கள் என்று அவர்கள் புகார் செய்கி

கோமாரியில் உள்ள அகதிகளை உடனடியாக பொத்துவில் பகுதியில் மீளக்குடியமர்த்தி அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டும் அல்லது தற்போது உள்ள இடங்களில் மலசல கூடங்கள் கிணறுகள் அமைத்துக் கொடுக்க வேண்டும் அல்லது திருக்கோயில் பகுதியில் உள்ள அகதிமுகாம்களுக்கு இவர்களை அனுப்பிஅங்கு வைத்துப் பராமரிக்க வேண்டும்.

அம்பாறையில் இருந்த தமிழ் அகதிகளினால் சுற்றாடல் மாசுபடுகிறது என்று திருக்கோயில் பகுதியிலுள்ள அகதிமுகாம் பகுதிக்கு மாற்றம் செய்ய முடியுமென்றால் கோமாரியில் உள்ளவர்களையும் திருக்கோயில் பகுதிக்கு மாற்றம் செய்வதில் பிரச்சினைகள் இருக்க மாட்டாது என அகதிகள் எதிர்பார்க்கிறார்கள்.

மிகவும்முக்கியமானதொன்று கடந்த 25 மாதங்களாக எந்த விதமான தொழிலும் இல்லாது, கிடைக்கும் உலர் உணவுப் பொருள்களை உண்டு உறங்க வேண்டியதாக இருக்கிறது என்று அகதிகள் கண்ணீரும் கம்பலையுமாக தெரிவிக்கிறார்கள்.

நன்றி. வீரகேசரி.

## இரு பொலிசார் தற்காலிக வேலை நீக்கம்

(கொழும்பு)

பலவத்தை இராணுவத் தடுப்பு முகாமிலிருந்து பத்து கைதிகள் தப்பியோடியமை சம்பந்தமாக நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து இரண்டு பொலிஸ் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

## உள்ளூர் உற்பத்திகளின் தரம்பேண நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் உற்பத்திப்பொருள்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தர நிர்ணயம் செய்யப்படுவதற்காக, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் பல்கலைக்கழக மருத்துவபீட, விஞ்ஞான பீடங்களின் அனுசரணையோடு, தொழிற் சபை அபிவிருத்தி நிறுவனம்என்னும் அமைப்பைஉருவாக்கியுள்ளது.

இந் நிறுவனமானது தரமான பொருள்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் உற்பத்தியாளர்களை வழி நடத்தல், நுகர்வோருக்கு தரமான உற்பத்திப் பொருள்கள் கிடைக்கச் செய்தல் என்பவற்றை அடிப்படை நோக்கமாக கொண்டு செயலாற்றும்.

உற்பத்திப் பொருள்கள் மீதான தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அபிவிருத்தி நிறுவனத்தின் தர நிர்ணயக் குழு மேற்கொள்ளும். இக் குழுவில் யாழ் பல்கலைக்கழகம் மற்றும் சுகாதாரப் பகுதியினர், பிற துறை சார்நிபுணர்கள் இணைக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

## மாணவி கடத்தல் முயற்சி தோல்வி

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதச்சென்றமாணவியை கடத்திச் செல்ல ஒரு பெண்மணி உட்பட சிலர் முயன்றதாகவும், மாணவியின் சாதுரியத்தால் அம்முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

கடந்த சனியன்று கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது;

கன்னாரத் தெருவில் வசிக்கும் மாணவி ஒருவர் கொட்டாஞ்சேனை பாடசாலை ஒன்றில், பரீட்சை எழுத வீதி வழியே நடந்து வந்து கொண்டிருந்த போது நடுத்தர வயதுப் பெண் ஒருவர் அம் மாணவியை அணுகி ''சுலைமான் ஆஸ்பத்திரி'' எங்கே என்று கேட்டதாகவும் அது பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனக் கூறி விலகிச் செல்ல இம் மாணவி முற்பட்டபோதும் அவளைத் தொடர்ந்ததாகவும், அப்போது அருகிலிருந்த ஆட்டோவிலிருந்த நடுத்தர வயதான ஒருவரும், அப்பெண்மணியும் இந்த மாணவியை கடத்திச் செல்ல திட்டமிட்டிருந்ததாகவும், எனினும் மாணவியின் புத்தி சாதுரியத்தால் அசம்பாவிதம் எதுவும் நிகழாமல் தடுக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

## நைஜீரிய பெண்ணிற்கு ஏழு வருடச் சிறை

(கொழும்பு)

இப்பெண் 1990 ஆம் ஆண்டு

## வரி விளம்பரம்


### புதிய மீரா நாவல்

1992 இல் வெளிவந்தவை ''ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்'' (வாமதேவன்) ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'' (சிதம்பர திருச்செந்திநாதன்) ''விண்ணில் அல்ல விடிவெள்ளி'' (தாமரைச் செல்வி) யாழ்ப்பாணம், சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது. (2952)

### தையல் இயந்திரங்கள்

தையல் இயந்திரங்களை வாங்கவும், விற்கவும், பழுதடைந்த தையல் இயந்திரங்களை உங்கள் வீட்டிலேயே வைத்துத் திருத்தவும், உதிரிப் பாகங்களைப் பெற்றுக் கொள்ளவும், தையல் இயந்திர விற்பனை நிலையம், கண்டி வீதி, சாவகச்சேரி. (2953)


### பொலிஸ் சீருடைகள் மீட்பு

(காலி)

கடுவெல சவக்காலையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பொலிஸ் சீருடைகள் அடங்கிய பொதிகளைத் தங்காலைப் பொலிசார் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது கைப்பற்றியுள்ளனர்.

இதே வேளை, கடுவெலக் கடலிலும் பொலிஸ் சீருடைப் பொதிகள் பல மிதந்து கொண்டிருக்கக் காணப்பட்டன கடல் அலை சீருடைப் பொதிகளை கடலில் வெகுதூரத்துக்கு அடித்துச் சென்றதால் பொலிசார் கைக்கு அந்தப் பொதிகள் அகப்படவில்லை.

### சமய அறிவுப் போட்டி

(குருநகர்)

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான மகோற்சவத்தை ஒட்டி சமய அறிவுப் போட்டி நடத்தப்பட உள்ளது.

பொது, மேல், மத்திய, கீழ்ப் பிரிவுகளாக நடத்தப்பட இருக்கும் மேற்படி போட்டிகளுக்கான கேள்விகளை புதிய முறையில் ஆலயத் திருநாட்கள் 12 தினங்களிலும், 12 தலைப்புகளில் சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவமகாலிங்கம் நிகழ்த்தும் உரைகளில்இருந்து அமைக்கப்படுமென போட்டி அமைப்பாளர்கள்தெரிவிக்கின்றனர். (21)

### தீவக மக்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களில் புதிதாக உலர் உணவுஅட்டைகளுக்கு விண்ணப்பிப்போர்


கொக்குவில் இந்துக் கல்லூரி

பாடசாலை அபிவிருத்திச்சபைபிரதிநிதிகளை

**தெரிவு செய்தல்**

ஆசிரியர்களுக்கான
கூட்டம் முற்பகல் 10.00 மணி

பெற்றோர்களுக்கான
கூட்டம் பிற்பகல் 3.00 மணி


காலம்: **12-8-92** புதன்கிழமை

தயவு செய்து எல்லா ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கொச்குவில் இந்துக்கல்லூரி (சி 4847) இ. மகேந்திரன் அதிபர்


## 91-ம் நாள் நினைவஞ்சலி

தாய்மடி 23 — 03 — 1973



தாயக மண் 11 — 05 — 1992

சாள்ஸ் அன்ரனி வசேட படையணியைச் சேர்ந்த

**லெப். ரவிசங்கர் (லக்சன்)**

(மகாலிங்கப் கௌரிமுகுந்தன்)

பறிக்கப்பட்டன பல நலன்கள்
கொதித்தெழுந்தது மறப்புலிப்படை
களம்நோக்கி ஓடும் சாள்ஸ் அன்ரனிப் படையிலே
கலந்து சென்று தட்டுவான் கொட்டியில் வீரச்சா
ஏற்றவனே
இந்த மண்ணுள்ளவரை நினைவு வைக்கப்படுவாய்
குருதியிற் சிவந்தமண் கூறும் உங்கள் வீரக்கதைகள்
வீரனே, அஞ்சலிக்கின்றோம்.

உன்னோடு சேர்ந்து வீரச்சாவு ஏற்றவர்க்கும் எமது அஞ்சலிகள்.

லெப். ரவிசங்கரின் அந்தியேட்டி 09-08-1992 ஞாயிற்

புதிதாக உலர் உணவுஅட்டைகளுக்கு விண்ணப்பிப்போர் தாங்கள் இடம் பெயர்ந்து தங்கி இருக்கும் பகுதி கிராம சேவையாளருக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

உலர் உணவு விநியோகம் தவிர்ந்த ஏனைய விடயங்களிற்கும் அவரவர் சொந்தப் பகுதி கிராம சேவையாளரே ஈடுபடுவர்என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (பா)

பல்கலைக்கழகம்

## மண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மண்ணெய் பெறுவதற்கு பற்றுச்சீட்டு பெற்ற யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இன்று ஞாயிறு மண்ணெய் களஞ்சியப் பகுதியில் வைத்து வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இரவு வேளைகளில் மின்சார வநியோகம் தொடர்ச்சியாக வழங்கபபடும் எனவும் தெரிவிக்கபபடுகிறது.

இதேவேளை பல்கலைக்கழக ஊழியர்களுக்கும் மண்ணெய் வழங்கவும் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

## சுயதொழில் பயிற்சி

(கொழும்புத்துறை)

சுண்டிக்குளியிலுள்ள ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கப் பணிமனையில் ஊனமுற்றவறிய குடும்பப் பெண்களின் நலன் கருதி இலவசதையல் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கத்தின் சுயதொழில்பயிற்சி திட்டத்தின் கீழ் இத்தையல் பயிற்சி ஆரமபிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். (24)

சா, பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு வந்தபோதிலும் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாக இல்லை.

தற்போது பாணமை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் வழங்கப்படும் கோமாரி அகதிகளுக்கான உலர் உணவுப் பொருள்களை

ரவமாக இருந்து வருகிறார்கள் என்று அவர்கள் புகார் செய்கிறார்கள்.

மலசலகூட வசதிகள் இல்லாதமையினால் கோமாரி சுற்றாடல் முழுமையாக மாசுபட்டு வருகிறது போதிய கிணறுகள் இல்லாததினால் அகதிகளாக இருப்பவர்கள் வாரத்தில் ஒரு தினம் தான் குளிக்கக் கூடியதாக இருக்கிறது.


## ஏழு வருடச் சிறை

(கொழும்பு)

போதைவஸ்து கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் நைஜீரியாவைச் சேர்ந்த ஜேன் ஓட்லா (வயது 30) என்ற பெண்ணுக்கு நீர்கொழும்பு நீதிமன்றம் ஏழுவருடகாலச் சிறைத்தண்டனை வழங்கியது.

இப்பெண் 1990 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தனது சூட்கேசின் அடிப்பாகத்தில் 1830 கிராம் போதை வஸ்தை மறைத்து வைத்து கடத்திச் செல்ல முயன்ற போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

# நினைவஞ்சலி

| 31-ம் நாள் | 2-ம் ஆண்டு | 1-ம் ஆண்டு |
|---|---|---|
|  |  |  |
| **மேஜர் கிண்ணி** (கந்தசாமிதுரை ரவீந்திரன்) | **மேஜர் ஜேம்ஸ்** (உருத்திராபதி சிறீதர்) | **மேஜர் சொனி** (சிவஞானசுந்தரம் அசோகன்) |
| மலர்வு 25-07-1966 வீரச்சாவு 10-07-1992 | மலர்வு 06-09-1962 வீரச்சாவு 09-08-1990 | மலர்வு 28.11.1967 வீரச்சாவு 27.07.1991 |

சுந்தரத் தமிழீழம் சுதந்திரம் பெறு
நாளில்
மைந்தர்கள் உம் பெயர்கள் உரிமை
பெறும்!
சிந்திய குருதியால் சேறான பூமியிது
இந்த வையம் வியக்க விடிவு பெறும்!

(சி-4845)

மண் மீட்கும் போரில் நீர் மடிந்து
ஆண்டுகள் போனாலும் என்ன?
எண்ணத்தில் நிறைந்துள்ளீர் ஆதலால்
திண்ணமுடன் வெற்றியை நாடுகின்றோம்.

திசையெங்கும் தமிழர் தாயகம்
சமைக்கும் போர் விரிந்திடவென்றே
இசைவுடன் குருதி சிந்திய உங்கள்
திருவடி
நினைந்தே நாங்கள் வணக்கம்
செய்கிறோம்.

– நண்பர்கள்

அஞ்சலிகள்.

லெப. ரவிசங்கரின் அந்தியேட்டி 09-08-1992 ஞாயிற்றுகிழமை இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அன்றைய தினம் போராளிகளையும், நண்பர்களையும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முடக்காடு வீதி,
நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி.

பெற்றேர், பெரியதாய்மார்,
மாமன் குடும்பத்தினர்.

(சி/4822)

## நினைவு கூருகின்றோம் ...

## 1992 - 08 - 09

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு அச்சுவேலியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

வடமராட்சி, வலிகாமம், தீவகப் பொறுப்பாளர் -

**மேஜர் ஜேம்ஸ்** [உருத்திராபதி சிறீதர் -'சில்லாலை' நெடியகாடு, வல்வெட்டித்துறை]

**ஞானம்** [ஐயாத்துரை கோபாலகிருஸ்ணன் - ஞானம் வீதி, அச்செழு, நீர்வேலி]

வவுனியா கொறவப்பொத்தானைவீதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு, எரிக்கப்பட்ட 2 பெண்கள் உட்பட 19 தமிழர்கள்

யாழ் புகையிரத நிலைய இடம்பெயர்ந்தோர் முகாம் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்-வேலணை கிழக்கு 1-ம் வட்டாரம் மற்றும் அராலித்துறைப் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப. விக்கி** [விக்னேஸ்வரி சதாசிவம் - பூந்தோட்டம், வவுனியா]

**விஜித்ரா** [புஸ்பராணி செல்லையா - முருகண்டி, கிளிநொச்சி]

மட்டக்களப்பு / கிரான், கும்புறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழ்ப் பெண்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4850]

சிந்தனைக்கு

காசில்லாத பயணி கள்வரைக்
கண்டாலும் பாடுவர்.
— டெனிமஸ் ஜுவெனால்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 09- 08- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த பெ. எண் - 05

# பிச்சையில் முதலிடம் பெருமைக்குரியதோ?

"இன்று சிறிலங்கா உலக வங்கியிடம் வாங்கும் கடன்களுக்கு உலகவங்கி நிபந்தனைகளைக் கடுமையாக்கியுள்ளது. உடனடியாகத்தேவைப்படும் 10கோடிஅமெரிக்க டொலர்களை கடனாக வழங்குவதற்கு டீசல் விலையை மறுசீரமைக்க வேண்டும். கோதுமை விலையை அதிகரிக்க வேண்டும் என நிபந்தனைகளை விதித்து வருகின்றது" இவ்வாறு கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் பேசிய சுதந்திரக்கட்சி உறுப்பினர் தர்மசிறிசேனநாயக்கா தெரிவித்தார்.

அதாவது, அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரிக்குமாறு உலகவங்கி சிறிலங்கா அரசை வற்புறுத்தி வருகின்றது. இதைத்தவிர பணப்பெறுமதி இறக்கம் செய்யப்பட வேண்டும் என உலகவங்கி அழுத்தம் பிரயோகித்தும் வருகின்றதுஅதாவதுஅந்நிய முதலீட்டாளர்கள் நன்மையடையுமாறு பொருளாதாரத்தில் சலுகைகளை மேலும் அதிகரிக்குமாறு வற்புறுத்தி வருகின்றது. 1977ஆம் ஆண்டிலிருந்து நிதி உதவி பெறும்பொருட்டு பல பொருளாதாரச் சலுகைகளை அந்நிய நாட்டு நிறுவனங்களின் ஆலோசனையுடன் வழங்கி வந்தஐக்கியதேசியகட்சிஅரசாங்கத்திற்குஇன்று அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரித்தல் என்பது கடும் ஒரு நிபந்தனையாகவே உள்ளது. அதிலும், அடுத்த வருடத்தில் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் மிகவும் சிக்கலானதாகவே இருக்கும். ஆனால், இன்று சிறிலங்கா அரசாங்கத்திற்குள்ள நெருக்கடி நிலையில் அவசர உதவி கிடைக்காவிடின் அரசாங்கம் பெரும் நெருக்கடி நிலையை அடையும்'என்பதிலும் சந்தேகமில்லை.

இதேவேளை, "பெருமளவு வெளிநாட்டு உதவியைப்பெற்று எமது அரசாங்கம் சாதனை நிலை நாட்டியிருக்கின்றது" என வெளிவிவகார அமைச்சரும், நிதி இராஜாங்க அமைச்சருமான ஹரோல்ட் ஹேரத் கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார். மேலும் அவர், வெளிநாட்டிலிருந்து நாம் மட்டும் கடனுதவியைப் பெறவில்லை. உலகிலுள்ள வளர்முகநாடுகள் அனைத்துமே, வெளிநாடுகளிடமிருந்தும் கடன்வழங்கும் நிறுவனங்களிடம் இருந்தும் நிபந்தனையின் அடிப்

# மாக்கோஸிற்கு ஒரு நீதி கொணேக்கருக்கு இன்னொரு நீதி

முன்னாள் கிழக்கு ஜேர்மன் அதிபர் கொணேக்கர் இன்று ரஷ்யாவினால் கைவிடப்பட்டு புதிய ஜேர்மனியிடம் ஒப்படைக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். கொணேக்கர் கிழக்கு ஜேர்மனியில் ஆதிக்கத்தில் இருந்தபோது செய்தவை சரியா அல்லது பிழையா என்பதல்ல இங்கு எடுத்துக் கொள்ளப்படும் விடயம். ரஷ்யாவிடம் தஞ்சம் புகுந்த அவரை ரஷ்யா தஞ்சமளிகக மறுத்து ஜேர்மனிடம் ஒப்படைத்துள்ளமை எந்த ரகத்தைச் சார்ந்ததென்பதே இங்கு கேள்வி.

கொணேக்கர் கிழக்கு ஜேர்மன் அதிபராய் இருந்தபோது கிழக்கு ஜேர்மனிலிருந்து மேற்கு ஜேர்மனுக்கு மதில் பாய்ந்து தப்பி ஓட முற்பட்டவர்களை கொணேக்கர் அரசாங்கம் சுட்டு வீழ்த்தியது. இதுவே இவர்மீது சாட்டப்படும் பிரதான குற்றச்சாட்டு. அதிகாரத்திலிருந்து வீழ்ந்த நிலையில் ரஷ்யாவில் தஞ்சம் புகுந்திருந்த கொணேக்கரை இக்குற்றச் சாட்டின் பெயரால் விசாரணைக்காக ஜேர்மனியிடம் ரஷ்யா ஒப்படைக்க வேண்டும் என்பதே ஜேர்மனியின் கோரிக்கை. இப்போது அக்கோரிக்கை நிறைவேற்றப் பட்டுள்ளது.

ஆனால் இதற்கு முன்பு நிகழ்ந்த இதுபோன்ற சம்பவங்களைப் பார்ப்போம். ஈரானிய மன்னன் ஷா ஈரானியப் புரட்சியின் போது ஈரானை விட்டுத் தப்பி ஓடினார். அமெரிக்கா அனுசரணையாக நின்று அவருக்குத் தஞ்சமளித்தது. பலகோடிக்கணக்கான டொலர் சொத்துக்களை ஈரானை விட்டு அபகரித்துச் சென்றமை, ஈரானில் பெரும் கொலைகளைச் செய்தமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக ஈரானிய புரட்சி அரசாங்கம் ஷாவை கையளிக்குமாறு அமெரிக்காவிடம் கோரியது. ஆனால் ஷா ஈரானிடம் கையளிக்கப் படவில்லை. பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியாக இருந்த மாக்கோஸின் நிலையும் அவ்வாறே. மாக்கோஸையும் கையளிக்குமாறு கோரப்பட்ட போதிலும் அவரும் கையளிக்கப்படவில்லை

ஆனால் இப்போது கொணேக்கர் ரஷ்யாவால் கையளிக்கப்பட்டுள்ளார். லொக்கபீ குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் இரு லிபியர்களையும் கையளிக்க கடாபி ஆரம்பத்தில் மறுத்தபோதிலும் அமெரிக்காவின் பொருளாதாரத் தடை நடவடிக்கைகளை அடுத்து அவர்களை விசாரணைக்காகக் கையளிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளார். போதைவஸ்துக் கடத்தற் குற்றச்சாட்டின் பெயரில் பனாமா ஜனாதிபதி நொறியேகாவை அமெரிக்க அரசு இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம் கைது செய்துள்ளது

கொணேக்கர் ஓர் அரசியற் தலைவன். அவரின் தவறுகளுக்காக அவரை மக்கள் அதிகாரத்திலிருந்து தூக்கி எறிந்து விட்டனர். அதுவே அவருக்குரிய பெருந் தண்டனையாகும். அரசியற் குற்றவாளி என்ற வகையில் இன்னொரு நாட்டிற் தஞ்சம் புகுவதற்கான உரிமை அவருக்கு மறுக்கப்பட்டிருக்கக் கூடாது. கொணேக்கரை ஜேர்மனியில் வைத்து கைதுசெய்து விசாரணையின் பின்பு தண்டனை வழங்கப்படுவதை ஏற்கலாம். அல்லது ரஷ்யாவிலிருந்து அவர் கடத்திவரப்பட்டு விசாரிக்கப் படலாம். யூதர்கள் தமது எதிரிகள் பலரை இவ்வாறு கடத்திவந்து தமது நாட்டில் வைத்து விசாரித்து தண்டனை வழங்கியுள்ளனர். ஆனால் அரசியற் தஞ்சம் புகுந்த ஒருவரை ரஷ்யா கையளித்தமை தவறு, கொணேக்கர் குற்றம் புரிந்திருந்தால் அவர் பதவியில் இருந்த போது அவருக்கும் அவரது செயலுக்கும் உறுதுணையாக இருந்த ரஷ்யரும் தண்டிக்கப்படவேண்டும்.

- சாரணன்

# பொஸ்னியாவில் தேவை ஏற்படின் படைபலம் பிரயோகிக்கப்படும்

— ஜோர்ஜ் புஷ்

[வாஷிங்டன்]

பொஸ்னியா கர்சகோவியாவில் மனிதாபிமானப் பணிகளைத் தொடர்வதற்குத் துணையாக தேவையானால் படைபுலத்தையும் பயன்படுத்துவதற்கு தயார் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார். ஆனால் இது பற்றிய முடிவுக்கு ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபை ஒப்புதல் அளிக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

செர்பியாவில் சிறை வைக்கப்பட்டுள்ள பொஸ்னியாக் கைதிகள் பற்றிய விவரணப் படங்கள் அதிர்ச்சி தருபவையாக இருப்பதாகவும் கூறிய அதிபர் புஷ் இந்தப் பிரச்சினையை தக்க முறையில் தீர்க்க வேண்டும் என்பதற்கு இந்த ஒரு ஆதாரம் மட்டுமே போதுமானது என்றும் தெரிவித்தார்.

இதேவேளை செர்பியாவிலுள்ள கைதிகள் முகாம்களில் நடைபெறும் அட்டூழியங்களைத் தடுக்க ஐக்கிய நாடுகள் சபை என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது பற்றி அதிபர் புஷ் பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயருடன் தொலைபேசி மூலம் ஆலோசனை நடத்தியுள்ளார்.

தென் ஆபிரிக்காவில்

## பேச்சுவார்த்தை ஆரம்பிக்க அமெரிக்கா வற்புறுத்து

(ஜோகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் நெருக்கடி நிலை உருவெடுப்பதை தவிர்ப்பதற்காக ஜனநாயக ரீதியில் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று தென் ஆபிரிக்க அரசிடம் அமெரிக்கா வற்புறுத்தியுள்ளது.

ஆபிரிக்காவுக்கான அமெரிக்கா ராஜாங்க அமைச்சின் உதவி அமைச்சர் ஹேர்மன் கொறென் மேலும் கூறுகையில் தென் ஆபிரிக்காவில் அரசியல் தீர்வுகாணப்பட்டால்மட்டுமே நிலைமை சீரடையும் எனக் கூறியுள்ளார்.

## கிளிண்டன் செல்வாக்கு அதிகரிக்கிறது

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பற்றிய கருத்துக் கணிப்பில் கிளிண்டன் முன்னணியில் இருப்பதாக சி.என்.என். செய்திச் சேவை தெரிவித்துள்ளது. பில் கிளிண்டனுக்கு கருத்துக் கணிப்பில் ஐம்பத்தேழுசதவீத வாக்குகளும், ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ்ஷுக்கு முப்பத்தியிரண்டு சதவீதவாக்குகளும் கிடைத்திருப்பதாக அறிவிக்கப்பட்ள்டுளது.

இதேவேளை ஜனவரி மாத

கட்சித் தாவல் தடுப்புச் சட்டம்:

## திருத்தி அமைப்பதை அரசு காலதாமதம் செய்கிறது

- எல். கே. அத்வானி

(டில்லி)

தினம் செய்தியாளர்களி

## இந்தியாவுடனான உறவுக்கு மொறீசியஸ் முதலிடம் தரும்

-வெளியுறவு அமைச்சர்

(சென்னை)

இந்தியாவுடன் மேலும் அதிக கலாசார பரிமாற்றம் செய்துகொள்ள ஆர்வத்துடன் இருப்பதாக மொறீசியஸ் நாட்டின் வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் மூன்றுநாள் சுற்றுப்பயணம் செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்தியா வந்துள்ள அவர் விமானநிலையத்தில் செய்தியாளரிடம் பேசும்போது இரு நாடுகளுக்குமிடையிலான கலாசார பரிமாற்றம் இந்த நாடுகளுக்கு இடையே உறவை வலுப்படுத்த மேலும் உதவும் என்றும் தெரிவித்தார்.

மொறீசியஸ் நாட்டில் வாழ்வோரில் பெரும் பகுதியினர் இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் இருந்து சென்று குடியேறியவர்கள் என்பதால் இந்தியாவுடனான உறவுகளுக்கு தமது நாடு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் மொறீசியஸில் வாழ்வோரில் சுமார் பத்து வீதமானோர் தமிழக வம்சாவளியினர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சிங்கப்பூரில் குண்டு வெடிப்பு மூவர் பலி; 60 பேர் காயம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் தற்போது கட்டப்பட்டுவரும் வர்த்தக வளாகம் ஒன்றில் குண்டு வெடித்ததால் மூவர் கொல்லப்பட்டனர் அறுபதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை இடம் பெற்ற இக் குண்டுவெடிப்பில் காயமடைந்த முப்பத்தைந்து பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆறு பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது, இக் குண்டு வெடிப்புக்கான காரணம் எதுவும் அறிவிக்கப்படவில்லை. இக் கட்டடத்தொகுதி இட்டத்தட்ட பூர்த்தியாகும் நிலையில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில்

## ஐ. நா. ஆயுத ஆய்வாளர் பணியை தாமதப்படுத்தினர்

(பக்தாத்)

பக்தாத் சென்றுள்ள ஐ.

வெளியுறவு அமைச்சருடன்

வில்லை. உலகிலுள்ள வளர்முகநாடுகள் அனைத்துமே, வெளிநாடுகளிடமிருந்தும் கடன்வழங்கும் நிறுவனங்களிடம் இருந்தும் நிபந்தனையின் அடிப்படையில் கடனுதவிகளைப் பெறுகின்றன" எனக் கடன்வாங்குவதற்குநியாயமும் கற்பித்தார்.

அதாவது எந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டாகிலும் கடனை வாங்கிக் கொள்ளுதல் நியாயமானது மட்டுமல்ல திறமையானதும் கூட என்பதே அவர் கருத்தாகும். இந்நிலையில், தற்போதைய அரசாங்கம் இலங்கையின் கடன் தொகை பற்றியோ அன்றிஅதன் விளைவுகளினால்ஏற்படும் பொருளாதாரநெருக்கடி பற்றியோ ஒருபோதும் கவலைப்படப் போவதில்லை.

கடந்த மார்ச்மாத இறுதியில் சிறிலங்கா அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கடனின் மொத்தத் தொகை 36600 கோடி ரூபா ஆகும். இதில் வெளிநாட்டுக் கடன் அறுபது வீதமாகும். அதாவது 21090 கோடி ரூபாவாகும் மிகுதி 14970 கோடி ரூபா உள்நாட்டுக் கடனாகும். இக்கடன் தொகை காரணமாக அரசாங்கத்தின் வருமானத்தின் பெரும் பகுதி மீளளிப்புச் செய்வதற்கேசெலவிடப்படுகின்றது. உதாரணமாக கடந்த மார்ச் மாதத்தில் 580 கோடி ரூபாவைச் சிறிலங்கா அரசாங்கம் கடனாகப் பெற்றது. இதில் 360 கோடி ரூபாவை தனது கடனுக்காக மீளச் செலுத்தியது.

அதாவது உள்நாட்டில் உயர்ந்த வட்டியிலும் வெளிநாடுகளில் நிபந்தனைகளின் பெயரிலும் பெறப்படும் கடனின் பெரும்பகுதி கடனை மீளச் செலுத்துவதற்கும் மிகுதி இராணுவச் செலவீட்டிற்கும் அரசாங்கத்தின் ஆடம்பரச் செலவீனங்களுக்குமே செலவிடப்படுகின்றது.

இந்நிலையில் வெளிநாடுகளிலும். உள்நாட்டிலும் அரசாங்கம் கடனைப் பெறுவதை எவ்வாறு அரசின் சாதனையாகக் கொள்ளமுடியும்என்பதைப் பற்றித் தெரியவில்லை. வரவரக் கடன்சுமை அதிகரிப்பதோடு மக்களும் நெருக்கடிக்கு உள்ளாகிவருகின்றனர். அரசின் இறைமை, தன்னாதிக்கம் என்பனவற்றைப் பற்றி அடிக்கடி பேசிக் கொள்ளும் திரு. பிரேமதாசா அரசாங்கம் பொருளாதாரக் கொள்கை வகுப்பாளர்களாக அந்நிய நாடுகளையும் நிதி வழங்கும் நிறுவனங்களையும் ஏற்றுக் கொண்டுள்ளமையும் அதற்கு நியாயம் கற்பிக்க முற்படுவதும் ஆச்சரியப்படத்தக்க தொன்றேயாகும்,

- எல். கே. அத்வானி

(டில்லி)

கட்சித் தாவல் தடுப்பு சட்டத்தை திருத்தி அமைப்பதை காலதாமதம் செய்வதற்காக இந்திய மத்திய அரசை எதிர்க்கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி குற்றம் சாட்டினார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில், சபாநாயகர்களின் மாநாடு பல பரிந்துரைகளை செய்திருப்பதாகவும், சென்ற கூட்டத்தொடரில் அரசு மசோதா ஒன்றைக் கொண்டு வர இணங்கி இருந்தது என்றும் தெரிவித்தார்.

தென் ஆபிரிக்காவில்

## வேலை நிறுத்தம்; தொழிலாளர் பூரண ஆதரவு

(ஜோகனஸ்பேர்க்)

தென் ஆபிரிக்காவில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அழைப்பு விடுத்துள்ள நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு தொழிலாளர்கள் பெருமளவில் ஆதரவு அளித்துள்ளனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியல் சீர்திருத்தங்களை அமுல்படுத்துவது தாமதப் படுத்தப்படுவதை எதிர்த்து ஆட்சேபிக்கும் விதத்தில் வேலை நிறுத்தம் செய்ய ஏ. என். சி. அழைப்பு விடுத்திருந்தது.

வேலை நிறுத்தத்திற்கு தொழிலாளர்கள் பெருமளவு ஆதரவு தெரிவித்தனர் என்றும்,

கேப்டவுண் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் இந்த வேலை நிறுத்தம் முழு அளவில் அனுசரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்குச்சந்தை ஊழல் தொடர்பாக

## நிதியமைச்சர்மன்மோகன்சிங் பதவி விலக மீண்டும் மறுப்பு

பங்குச் சந்தை ஊழல் மோசடிகளுக்கு தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலக வேண்டும் என்ற எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கையை இந்திய நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் மீண்டும் நிராகரித்துள்ளார்.

கடந்த செவ்வாயன்று பாராளுமன்றத்தில் இவ்விவகாரம் தொடர்பாக ஆராய பாராளுமன்றக் குழுவொன்றை அமைப்பது பற்றிய விவாதத்தில் குறுக்கிட்டு பேசிய நிதியமைச்சர் மேலும் கூறுகையில், ஆதார பூர்வமற்ற குற்றச்சாட்டுக்களை தனக்கு எதிராகச் சுமத்த வேண்டாம் என்றும் எதிர்க் கட்சிகளைக் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் இந்த விடயத்தில் தான் எதையுமே மறைக்கவில்லை என்றும்,பங்கு சந்தை ஊழலில் இந்திய வங்கிகளுக்கும், வெளிநாட்டு வங்கிகளுக்கும் இருக்கும் தொடர்பு பற்றி பாராளுமன்றக் குழு ஆராயும் என்றும் தெரிவித்தார்.

கிடைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனவரி மாதத்தில் புஷ்ஷின் தேர்தல் செல்வாக்கு நாற்பத்தியாறு சதவிகிதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது,

### காஸ்ட்ரோ கலந்து கொள்வார்

(ஹவானா)

ஜகார்தாவில் எதிர்வரும் செப்டம்பர் முதலாம் திகதி தொடங்கவுள்ள அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டில் கியூபாவின் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ கலந்து கொள்ளவுள்ளார்.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட உத்தியோக பூர்வ அழைப்பை கியூபா ஜனாதிபதி ஏற்றுக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

பொஸ்னியா - கர்சகோவியாவில்

## முகாம்களைப் பார்வையிட அனுமதிக்க வலியுறுத்து

முன்னாள யூகோஸ்லாவியாவில் இயங்கி வரும் முகாம்களைப் பார்வையிடுவதற்குச் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சர்வதேச சங்கங்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என ஐ. நா. பாதுகாப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

பொஸ்னியா . கர்சகோவியா முகாம்களில் மனிதஉரிமைகள் மீறப்படுவதாக தெரிவிக்கப்பட்ட புகார்களை அடுத்தே ஐ. நா. பாதுகாப்புச் சபை மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துக்கு அமைய முக்கியமாக ஜெனீவா ஒப்பந்தத்திற்கு அமைய நடக்க வேண்டும். இந்தச் சட்டம் ஒப்பந்தங்களை மீறி நடப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என ஐ. நா. பாதுகாப்புச் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இங்குள்ள முகாம்களில் மக்கள் கைதிகள்போல் நடத்தப்படுவதாகவும் சேர்பிய படைவீரர் நாஸிகளைப்போல் நடந்து கொள்வதாகவும் புகார்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(பக்தாத்)

பக்தாத் சென்றுள்ள ஐ. நாவின் ஆயுத ஆய்வாளர் குழுவினர்பணியைத் தொடங்குவதை சற்றுத்தாமதமாக்குமாறு ஈராக் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுள்ளனர். ஈராக்கில் தேசிய தினம் கொண்டாடப் படுவதையொட்டி இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே ஆயுத ஆய்வுக் குழுவினர் ஈராக்கிய வெளியுறவு அமைச்சருடன் நடத்திய பேச்சுக்களின் போது குழு எங்கெல்லாம் செல்ல வேண்டும் என்பது பற்றிய கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டுள்ளது.

இக் குழுவினா ஐ. நா. சபை நிறைவேற்றியுள்ள தீர்மானங்களுக்கு முற்றும் இசைவாக ஈராக் நடந்து கொள்ளும் என்று எதிர்பார்ப்பதாக செய்தியாளர்களிடம் கூறியுள்ளனர்.

## ஆசிய இன இளைஞர் ஒருவர் லண்டனில் குரூரக் கொலை

(லண்டன்)

கடந்தவாரம்ஆசியஇளைஞரொருவர் வெள்ளைக்கார இளைஞர் கும்பல் ஒன்றினால் மிகவும் குரூரமாக தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் ஒன்று லண்டனில் நடை பெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தானைச்சேர்ந்த அறமாஸ் என்ற மேற்படி இளைஞனே மிருகத்தனமான முறையில் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்

ஆசிய பெண்கள் சிலரை இனவெறித்தனமான வசவு வார்த்தைகளால் வெள்ளைக்கார இளைஞர்கள் நால்வர் திட்டியதாகவும் இதனை நிறுத்துமாறு மேற்படி இளைஞர் தடுத்ததை அடுத்து ஏற்பட்ட கைகலப்பில் வெள்ளைக்கார இளைஞர்கள் பயந்தோடியதாகவும் மீண்டும் மது போதையில் வேறும்பல இளைஞர்களை கூட்டிவந்து மேற்படி இளைஞரை பலமாக தாக்கி கொலை செய்துள்ளனர்.

ஆசிய பெற்றோர்கள் இத்தகைய இன நிற வெறித் தன்மை வாய்ந்த சம்பவங்களின்போது உயிர் ஆபத்து, இரத்தக்களரிக்குஅஞ்சிஓரளவு மெதுமையான போக்கைக் கடைப்பிடித்தாலும் ஆசிய இளந்தலை முறையினர் தம்மை வேதனைப்படுத்துபவர்கள் துன்புறுத்துபவர்களிடமிருந்து ஒதுங்கிவிடாமல் எதிர் கொள்ளும் எதிர்ப்புணர்வு கூர்மையடைந்துவரும்போக்கு காணப்படுவதாக இனத்துவ ஆய்வு நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

### விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

[கொழும்புத்துறை]

யாழ் மாநகரசபைசனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் சனசமூக நிலையங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 15ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எறிபந்தாட்டம், கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், தாச்சிஎல்லே ஆகிய விளையாட்டுக்கள் இப்போட்டிகளில் இடம்பெறும்

இப்போட்டிகள் பற்றிய மேலதிக விபரங்கள் பெற விரும்பும் நிலையத்தினர் யாழ். நாவலர் வீதியில் உள்ள யாழ். மாநகரசபை நாவலர் கலாசார மண்டபத்தில் உள்ள சமாசப் பணிமனையில் நேரில் தொடர்பு கொள்ளும்படி சமாச விளையாட்டுக் குழுத் தலைவர் திரு எஸ்.ரி. கணநாதன் தெரிவித்துள்ளார். (24)

ஈழநாதம்

# போராளிகளின் உணர்வுகளை பிரதிபலிக்கும் 'கூவு குயிலே' - யோகி

(யாழ்ப்பாணம்)

''போராளிகளது உள்ளத்து உணர்வுகளை பிரதிபலிக்கும் கருவியாகவும், விடுதலைப் போராட்டம் குறித்து மக்களுக்குச் சென்றடைய வேண்டிய அரிய கருத்துக்கள் நிறைந்த பாடல்களைக் கொண்டதாகவும் இவ்ஒலிப்பதிவுநாடா ஆக்கப்பட்டுள்ளது.'' இவ்வாறு நேற்று யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கூவு குயிலே ஒலிப்பதிவு இசை நாடா வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய விடுதலைப்புலிகளின் கல்விப் பொறுப்பாளர் திரு. யோகி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும்போது பல ஆண்டுகளாக பல்வேறு கொடுமைகளையும் துன்பங்களையும்எமது மக்கள் எதிர்நோக்கி வந்துள்ளனர் உலகில் உள்ள பல்வேறு சக்திகளுக்கு எதிராகவும் போராடி வந்துள்ளோம். இவ்வாறான எமது மக்களினதும், போராட்டத்தினதும் பல்வேறு அம்சங்களை வெளிக்கொண்டு வரக்கூடிய மேலும்பல இசை நாடாக்கள் வெளிவர வேண்டும் என்றார்.

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை, விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு இளங்குமரன் ஆகியோரும் இவ்விழாவில் உரை நிகழ்த்தினர்.

## சிறப்பாக நடந்தேறிய "கூவு குயிலே" வெளியீடு

(யாழ்ப்பாணம்),


நிதர்சனத்தின் ஒன்பதாவது வெளியீடான கூவுகுயிலே என்னும் ஒலிப்பதிவு இசை நாடா வெளியீடு நேற்றுமாலை 5-00 மணிக்கு யாழ. இந்து குமாரசுவாமி மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

இன் நிகழ்வை நிதர்சனம் பொறுப்பாளர் திரு. பரதன் அவர்கள் தலைமை வகித்து நடத்தினார். தொடர்ந்து விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் அவர்கள் வெளியீட்டுரையை நிகழ்த்தி நாடாவை வெளியிட அதனை பண்டிதர் பரந்தாமன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இந் நாடாவின் மதிப்பீட்டுரையை திரு. யோகரெத்தினம் யோகி, திரு. புதுவை இரத்தினதுரை ஆகியோர் நிகழ்த்தினர்.

அதனையடுத்து இன் நாடாவில் அடங்கும் பாடல்களைப் பாடிய கலைஞர்களுக்கு பரிசில்களைவிடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார். இறுதியில் இன்னிசை நிகழ்ச்சியும் இடம் பெற்றது. (பா)

## 1-ம்ஆண்டுநினைவலைகள்

வீரஜனனம் 01 - 07 - 1971



வீரச்சாவு 23 - 07 - 1991

கட்டைக் காட்டில் வீரச்சாவை தழுவிக்கொண்ட

**வீரவேங்கை சுருளி**

(சிவகுரு சண்முகராஜா)

திதி: 09-08-1992

எம் அருமை மகனே!!
எம் மண்ணினதும் மக்களினதும் விடிவிற்காய்
இளமைக் கனவுகளை யெல்லாம்
மனதில் பூட்டி வைத்து
பருவ வயதில் பள்ளி சென்று பாடம் கேட்காது
குண்டு பொழியும் சென்றியில்
செருக்குடன் நிமிர்ந்து நின்று
எதிரியின் ஊடுருவல் எதிர்த்து—வீரமுடன்
கட்டைக்காட்டிலே களமாடி

பயிலுனர் ஆசிரியர்களுக்கு

## 100 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்குமாறு கோரிக்கை

புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள 35 000 பயிலுனர் ஆசிரியர்களுக்கு மேலதிக மாதாந்தப் படியாக ரூ. 100 வழங்கும்படி அகில இலங்கை அரச ஆங்கில ஆசிரியர்களின் சங்கம் ஜனாதிபதியைக் கேட்டுக்கொணடுள்ளது.

ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் மேலும் தெரிவிக்கப்படடுள்ளதாவது, 100 ரூபா மேலதிகப்படி வழங்குவதென்ற வரவு செலவுத்திட்ட தீர்மானத்தை நடைமுறைப் படுததுவதில் பயிலுனர் ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் திறைசேரி பாரபட்சமாக நடந்து கொண்டுள்ளது என குற்றம் சாட்டப்பட்டுள்ளது

ஆனால் அதேவேளை இந்த மேலதிகபடி தாதிப் பயிலுனர்கட்கும் சமயா சமய ஊழியர்கட்கும், நாளாந்த ஊழியர்கட்கும் வழங்கப்படுவதையும் மேற்படி சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது

35,000 ஆசிரியர்களுக்கும் நூறு ரூபா மாதாந்த மேலதிக படியை 1992 தைமாதத்தில் இருந்து வழங்க நடவடிக்கையெடுக்கும்படி மேற்படி சங்கம் ஜனாதிபதியைக் கேட்டு கொணடது.

## தீவுப் பகுதி ஓய்வூதியம்

[யாழ்பபாணம்]

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கியில் ஒப்வூதியம் பெறுவோர்க்குரிய ஆகஸ்ட் மாத வவுச்சர்கள் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ் அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கிக்கு வந்து சேர்ந்துள்ளதாகவும் இவற்றிற்கான கொடுப்பனவுகள் 10ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் பணமாக வழங்கப்படும் என்றும் இக்கிராமிய வங்கி முகாமையாளர் திரு சு வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

பதவி

சேவையின் அதி உச்ச சேவையாக யாழ் குடாநாட்டைக் கைப்பற்றுவதற்காக காத்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

ராணுவ

நேற்று இந்த முக்கிய உயர் மட்டக் கூட்டம் கூடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்துக்கு மிக அருகில் ஊர்காவற்துறை இருப்பதால் அங்கிருந்து யாழ்பபாணம் மீது தாக்குதல் நடத்துவது சுலபமாக இருக்குமென்றும் அதனாலேயே இராணுவ அதிகாரிகள் ஊர்காவற்துறை சென்று யாழ்ப்பாணம் மீது தாக்குதல் நடத்துவது பற்றி ஆலோசனை கலந்தார்கள் என்று மற்றொரு தரப்புச் செய்தி கூறுகிறது.

ஆஸ்பத்திரி

டது. செய்தியறிந்த மக்கள் அவரது இல்லத்திற்கு பார்வையிட சென்றனர்.

அரச

மனோதிடத்தைப் பெரிதும் பாதிக்கும் அம்சம் எனவும், இது வரும் நாள்களில் புலிகளுக்கெதிரான போரில் பின்னடைவை ஏற்படுத்தலாம் என்றும் இராணுவ அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

போர் முனையில் உயர் அதி

## மடு அகதி முகாமில் நீரின்றி மக்கள் அவதி

[வவுனியா]

மடு திருப்பதி அகதிமுகாமில் தண்ணீர்ப் பற்றாக்குறை நிலவுவதாக அறியப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கியுள்ள இந்த முகாமில் குளிப்பதற்கு தண்ணீர் பெறுவதில் மக்கள் அவதிப்படுகின்றனராம்.

இந்த முகாமில் உள்ள ஏராளமான பொதுமக்கள் இரு மைல் தொலைவில் உள்ள தச்சனாமருதமடு என்ற குளத்தில் குளிப்பதாக அறியப் பட்டது. [தி]

க. பொ. த. உயர்தர பரீட்சை

## அனுமதி அட்டைகளில் பல்வேறு குழறுபடிகள்

(கொழும்பு)

தற்போது நடைபெற்று வரும் க. பொ. த (உ/த)பரீட்சைக்குதோற்றுகின்றபரீட்சார்த்திகள் பலருக்கு பரீட்சைத் திணைக்களம் அனுப்பிவைத்துள்ள அனுமதி அட்டைகளில் பல்வேறு குளறுபடிகள் நடைபெற்றுள்ளது.

பரீட்சார்த்திகள் பலரின் அனுமதி அட்டைகளில் தாங்களுக்குப் பதிலாக வேறு பாடங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

வேறு சிலருக்கோ அவர்களின் பெயர்களே ஆங்கிலத்தில் தவறுதலாக காணப்படுகின்றன.

இத்தகைய குளறுபடிகளுக்கு கம்பியூட்டரா அல்லது பரீட்சைத்திணைக்கள ஊழியர்களின் கவனக்குறைவா காரண

## கடந்த ஒரு வாரத்தில் 65 இராணுவம் பலி

(கொழும்பு)

கடந்த ஒருவாரத்தில் மட்டும் கிழக்கிலும் ஏனைய எல்லைப் பகுதிகளிலும் சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த அறுபத்தைந்து பேர் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டதாக பிரிகேடியர் தயா வீரசேகரா தெரிவித்தார் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் மேலும் கூறுகையில், எமது திட்டங்கள் மீளமைக்கப்படுகின்றன எனவும் குறிப்பிட்டார்.

இம் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுகையில், புலிகள் படையினரை கிழக்கில் கட்டுப்படுத்தும் முகமாகவும், ஆயுதங்கள் மற்றும் ரவைகளை கைப்பற்றும் முகமாகவும் தாக்குதல் நடத்துகின்றனர். முதலாவது நோக்கத்தில் அவர்கள் வெற்றியை பெறவில்லை. ஆனால் ஆயுதங்கள். ரவைகள் என்பவற்றை அவர்களால் கைப்பற்ற முடிந்துள்ளது எனத் தெரிவித்தார்.

அத்துடன் வெளியிலிருந்து ஆயுதங்கள் வருவது தடைப்பட்டு இருப்பதால் அவர்கள் இப்போது ரவைகளுக்கும் ஏனைய யுத்ததளபாடங்களுக்கும் நெருக்கடியை எதிர் நோக்கி இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

வவுனியாவில்

## தமிழர் அடையாள அட்டை இராணுவத்தால் பறிமுதல்

(வவுனியா)

வவுனியா நகரை நோக்கிச் செல்வோர் பலரின் அடையாள அட்டைகள் இராணுவத்தால் பறிமுதல் செய்யப்படுகிறது. இராணுவத்தால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்படுவோரின் அடையாள அட்டைகளே பறிமுதல் செய்யப்படுகிறது.

கடந்த 3ஆம்திகதி வவுனியா நகருக்குச் சென்ற தமிழ் மக்கள் பலரை தாண்டிக்குளம் சோதனை முகாம் பகுதியில் வைத்து அழைத்துச் சென்ற இராணுவத்தினர் விடுதலைப் புலிகள் பற்றிய தகவல்களை அவர்களிடம் கேட்டுள்ளனர். செய்வதறியாது பதற்றமடைந்திருந்தவர்களின் அடையாள அட்டைகளை பறிமுதல்செய்த இராணுவத்தினர் திரும்பநகர பகுதி வந்தால் கழுத்தை வெட்டி ஊருக்கு அனுப்பிவிடுவதாக மிரட்டியுள்ளனர்.

இதேதினம் பல பயணிகள் இராணுவத்தால்தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)

வெளிநாட்டில்

தக்கது.

கொமடோர் ஜெயமான இந்தியா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஆகிய நாடுகளில் சிறப்புப் பயிற்சியைப் பெற்றவர்.

பிரிகேடியர்

ஒப்பரேசன் பலவேகய I, II ஆகியவற்றில் முக்கிய பங்காற்றிய இவர் ஒப்பரேசன் பலவேகய I இன்போது புலிகளின் அதிரடித் தாக்குதல் ஒன்றில் மயிரிழையில்உயிர்தப்பியவராவார். யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் குறித்து அடிக்கடியாழ்ப்பாண வானொலியில் அறிக்கைகள் வெளியிட்டுவந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் தப்பினார்

(டில்லி)

இந்தியாவின்தென்பகுதியில் படகுப்போட்டியில் ஈடுபட்ட வேளையில் மகாராணி எலிசபெத்தின் இளைய புதல்வர் இளவரசர் எட்வேட், விபத்திலிருந்து மயிரிழையில் தப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர் பயணம் செய்த படகு பாறைகளில் மோதி நொருங்கியுள்ளது.

## எவர் விஷன்

எமது ஸ்தாபனத்தில் திருத்த வேலைகளுக்காக ஒப்படைக்கப்பட்ட TV வீடியோ டெக், வீடியோ கமரா என்பனவற்றை உரியவர்கள் உடனடியாக திரும்ப பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். திரும்பபெறப்படாத பொருள்களுக்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என்பதனையும் அறிவுடன் தெரிவித்து கொள்கின்றோம்.

எதிரியின் ஊடுருவல் எதிர்த்து—வீரமுடன்
கட்டைக்காட்டிலே களமாடி
புதை குழியில் விதையாகி விட்டாய்—மகனே?
உன் கரத்தால் நழுவிய ஆயுதம்—உன்
தங்கை ஏந்தியுள்ளாள்—மணலாறில்!
எங்கள் வாழ்வுதான் இருளோடு இல்லறம்
நடத்துகிறதடா—மகனே!
கட்டைக்காட்டில் விடுதலை வேள்வியில் ஆகுதியான
நம் மாவீரர் கரங்களில் ஏந்திய ஆயுதமும்
மனதில் கொண்ட விடுதலை உறுதியும்
என்றுமே அழிந்து விடாது—மகனே
செல்வோம் விரைவில்—தமிழீழம் மலரும்
எமது மகனுடன் கட்டைக் காட்டிலே வீரச்சாவெய்திய
சக போராளிகளையும் இந்நாளில் நினைவு கூரும்.

மயிலிட்டி வடக்கு
மயிலிட்டி.

பெற்றோர், சகோதர,
சகோதரிகள், உறவினர்,
நண்பர்கள்.

(சி/4861)

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
15
—
3
—
1915



இறப்பு
3
—
8
—
1990

திருமதி

## இராசையா செல்லம்மா

ஆசையுடன் பேரப்பிள்ளைகள் என்றணைத்த
பாசமிகு அம்மம்மா ஆண்டிரண்டாய் எமைஅழைக்கும்
ஓசை விட்டுச் செல்ல உருக்குலைந்தே வாடினோம்
நேசமிகு இராசையா செல்லம்மா என்னும் பெயரில்
வாசமுடன் வையத்தில் வாழ்ந்த உன்நினைவு
நெஞ்சத்தில் என்றும் நிலைக்க உன் பூவடிகள்
- தொழுறோம்

பொற்பதி வீதி,
கொக்குவில்.

மகள், மருமகன்
பேரப்பிள்ளைகள்.

[2986]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பாடசாரதிகள் பலரின் அனுமதி அட்டைகளில் தாங்கள் விண்ணப்பித்த பாடங் ...சைத்திணைக்கள ஊழியர்களின் கவனக்குறைவா காரணம் என்பது தெரியவில்லை.

# தோட்டக்காணிகள் பகிர்வு எவருடனும் பேசவில்லை

- ரூபா கருணாதிலக

(கொழும்பு)

தோட்டக் காணிகளை பகிர்ந்தளிப்பது தொடர்பாக அரசாங்கம் எவருடனும் பேச்சுவார்த்தை எதையும் நடத்தவில்லை என்று பெருந்தோட்டத் தொழில் துறை அமைச்சர்ரூபா கருணாதிலக்க பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்கள் அவர்கள் பணியில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அவர்கள் வாழும் லயன் அறைகளிலிருந்து வெளியேற்றப்பட மாட்டார்கள் ஆனால் இந்த உறுதிமொழி தோட்டத்துறை உத்தியோகத்தர்களுக்கு பொருந்தாது என்றும் அவர் பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

# வவுனியாசோதனைமுகாமில் வாகனங்கள் மீது கெடுபிடி

(வவுனியா)

வவுனியா ஈரற்பெரியகுளம் சோதனை முகாம் பகுதியில் வடபகுதி செல்லும் வாகனங்கள் மீதான சோதனைகள் அதிகரித்துள்ளன.

சமீபத்தில் இந்த சோதனை முகாமில் ஆறு டிராக்டர்கள் தடைசெய்யப்பட்ட பொருள்களுடன் பிடிபட்டதை தொடர்ந்து சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

டிராக்டர்களின் பெட்டிகள் உடைக்கப்பட்டே சோதனை செய்யப்படுகின்றன. லொறிகள் மீது கடும் சோதனை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

# பயிரிடாக் காணிகளை பொறுப்பேற்க நடவடிக்கை

(கொழும்பு)

பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தக் கூடியதாக இருந்தும் பயிரிடப் படாமல் இருக்கும் காணிகளை தற்காலிகமாகப் பொறுப்பேற்பதற்கு காணி நீர்ப்பாசன அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு 88500 பேருக்குச் சொந்தமான பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படாத 236376 ஏக்கர் காணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் இக் காணிகளில் மூன்று மாத காலத்திற்குள் பயிரிடக் கூடியவைகளை பயிரிடவேண்டும் எனவும் இல்லாவிட்டால் இக் காணிகள் தற்காலிகமாக பொறுப்பேற்கப்பட்டு ஏனையவர்களுக்கு பயிரிடுவதற்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்பு

லங்கா பாதுகாப்பு அமைச்சின் அறிக்கைஒன்றுதெரிவிக்கிறது.

இந்த கண்ணிவெடிச் சம்பவம் குறித்து பெரிதும் துயரம் கொண்டிருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்தார்.

அச்சம் தெரிவித்துள்ளனர்.

போர் முனையில் உயர் அதிகாரிகள் அனைவரும் ஒன்றாகச் செல்லக் கூடாது என்று இராணுவ உயர்பீடம் முன்கூட்டியே எச்சரித்திருந்த போதிலும் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ உயர் அதிகாரிகள் சகிதம் கூட்டமாகச் சேர்ந்து சென்றது துரதிஷ்டவசமானது என்று அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## வடமாகாணந்

அமரதுங்கா ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

நேற்று மாலை றோஸ்மீட் பிளேஸில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்ற ஜனாதிபதி குழுவினர் அஞ்சலி செலுத்தியதுடன் அவரது உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார்.

## மேஜர்

போரின் போது முதலில் கிழக்குமாகாணத்திற்கு அனுப்பப்பட்ட படையணிக்கு தலைமை தாங்கினார். தொடர்ந்து வடபகுதியில் பலவேகய I, பலவேகய II, கறுப்பு நரி இராணுவ நடவடிக்கைகளிலும் நேரடியாக சம்பந்தப் பட்டிருந்தார்.

சிங்கள மக்கள் மத்தியில் பெரும் புகழ் பெற்ற இராணுவ தளபதியாக இருந்த இவர் சிங்கள இனத்தின் ''துட்டகைமுனு'' என அழைக்கப்பட்டார்.

அதேசமயம் இவர் யாழ்ப்பாணத்தின் மீது மிகப் பெரியதொரு இராணுவநடவடிக்கை ஒன்றிற்கான இராணுவத் தயார்ப்படுத்தல்களை நேரடியாக அவதானித்து விட்டுத் திரும்பிக் கொண்டிருக்கும் போதே கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேசமயம் கொப்பேகடுவாவின்தந்தையானஎல் பீ.கொப்பேகடுவ தனது 83வது வயதில் கடந்த மாதம் 25ஆம் திகதி காலமானார்.

கொள்கின்றோம்.

★ வீடியோ படம் பிடித்தவர்களும் கசற்றுக்களை பெற்றுக் கொள்ளவும்.

**எவர் விஷன்**
21 A மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(2987)

யாழ். மாவட்ட இறைச்சிக்கடை
உரிமையாளர் சமாச

## அறிவித்தல்

இறைச்சிக்கு வெட்டப்படும் கால்நடைகளைக் கொள்வனவு செய்வதில் ஏற்பட்டிருக்கும் பெரிய தட்டுப்பாடு காரணமாக யாழ். மாவட்ட இறைச்சிக்கடை உரிமையாளர் சமாசம் எடுத்துள்ள தீர்மானத்தின் முடிவை இறைச்சிப் பாவனையாளர்களுக்கு மிக்க வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

இதன்படி வாரத்தில் புதன், சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் யாழ் மாவட்டம் அடங்கிலும் இறைச்சிக்கடைகள் திறந்து வியாபாரம் செய்யப்படும். திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இறைச்சிக் கடைகள் திறக்கப்படமாட்டாது.

| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |
|---|---|---|
| மு. சிவானந்தராஜா, | கி.த. சிவலிங்கம், | க.சி. கிருஷ்ணன் |

[சி-4862]

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

08-08-1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5190

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:
42-3965, 28-8171, 26-4874, 24-3897, 27-7740, 42-3368, 28-9633, 42-3924, 26-3582, 26-5827, 41-6686, 12-3339, 42-2364, 27-3929, 70-8005.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:
42-7312, 28-1049, 40-9188, 26-2972, 26-763, 40-1079, 41-9166, 27-6583, 42-3615, 26-3722, 42-9625, 26-1742, 28-2049, 26-1321.